Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 29 | 12-04-2003 | சனிக்கிழமை | ஓசை 53

தேவையை நிறைவு செய்து
நேரத்தை மீதப்படுத்த
புடைவைத் தெரிவுக்கு
வவுனியா நகரில்...
SHANDHA TEX
பஜார் வீதி, வவுனியா.
T.P:24-22879 (சி-7835)

# சிறுவர்களின் மேம்பாட்டுக்கானசெயற்திட்டங்கள் இருநாள் செயலமர்வின் முடிவில் தீர்மானம்

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மேம்பாட்டுக்காக நேற்றும் நேற்று முன்தினமும் வட்டக்கச்சியில் நடைபெற்ற செயலமர்வில் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகப் பத்துச் செயற்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

யுனிசெவ்வின் இலங்கைக்கான பிரதிநிதி டெட்சாய்பன் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் இத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆய்வுப்பட்டறையில் பங்கெடுத்த அனைவரும் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்கள் மற்றும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்ட சிறுவர்கள், வீதிகளில் அனாதரவான முறையில் அலையும் சிறுவர்கள், ஆட்சேர்ப்பில் இணையமுன் வரும் சிறுவர்கள் தொடர்

(08ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு- கிழக்கு புனரமைப்பிற்கான கணக்கில் 3 மில். டொலரை நோர்வே வைப்பிலிட்டது

## மூன்று திட்டங்களுக்கு உலக வங்கி அனுமதி

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கிற்கான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியாக நோர்வே அரசு நேற்று மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கியில் வைப்புச் செய்தது. இதனைத் தொடர்ந்து சிரானினால் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பிற்கான மூன்று திட்டங்களுக்கான பணிகளை ஆரம்பிக்க உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது.**

வடக்கு - கிழக்குப் புனரமைப்பிற்கென பல நாடுகள் உதவியளிப்பதாக வாக்குறுதிகள் வழங்கியுள்ள வேளையில், நோர்வே அரசு நேற்று மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களைச் - சுமார் 300 கோடி ரூபா- உலக வங்கியில் வைப்புச் செய்துள்ளது. இதன் மூலம் வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கென உலக வங்கியில் தொடங்கப்பட்ட கணக்கு செயற்பாட்டிற்கு வருகின்றது.

இதேவேளை, நோர்வே அரசைத் தொடர்ந்து உதவியளிப்பதாக வாக்குறுதி அளித்த நாடுகள் சிலவும் இக்கணக்கில் நிதியினை வைப்பிலிடலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நோர்வே அரசு நிதியினை வைப்புச் செய்ததினையடுத்து வடக்கு- கிழக்குப் புனரமைப்பு முதல் நடவடிக்கைகளாக மூன்று திட்டங்களைச் செயற்படு

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் விவகாரக் குழு டென்மார்க் ஆட்சி குறித்து ஆராய்வு

விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் தற்போது டென்மார்க் சென்று அங்குள்ள அரசியலமைப்பு மற்றும் ஆட்சிமுறை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை டென்மார்க் சென்ற இக்குழுவினர் நேற்று முன்தினம் பல முக்கிய சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

டென்மார்க்கின் படைத்துறைய மைச்சில் இடம்பெற்ற கருத்தரங்கில் படைத்துறை அமைச்சைச் சேர்ந்த அதிகாரியான லாஸ்ரு வோல்சன் அவர்கள் உரையாற்றினார்.

படைத்துறையுடன் இணைந்த சனநாயக கட்டுப்பாடு, அரசியலமைப்பு அரசுக்கும், நாடாளுமன்றத்துக்கும் இடையிலான கடப்பா

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு மாகாண தேவைகள்

## சர்வதேச அமைப்புக்களின் சிபார்சு குறித்த அறிக்கை வெளியிடப்படும்!

### அரசாங்கம் அறிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தேவைகள் குறித்த சர்வதேச அமைப்புக்கள் முன்வைத்த செயற்திட்டங்கள் தொடர்பான அறிக்கையொன்றை வெளியிடப் போவதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது. மனிதாபிமானத் தேவைகள், புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உபகுழு அண்மையில் அறிக்கையொன்றினை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் வழங்கியதாக அரச ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறுகின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

மல்லாவிப் பகுதியில் 24.12.1997 இல் சிறிலங்கா அரசின் கைக்கூலிகளால் கொலைசெய்யப்பட்டு போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

லெப்.கேணல் அப்பையா (ஐயாத்துரை இராசையா) மடத்தடிவீதி, மானிப்பாய், யாழ். த.மு. இல.228, யோகபுரம் பாரதிநகர். மல்லாவி) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கடலில் போர்நிறுத்த மீறல் தவிர்ப்பு

## அரசின் சிபார்சுகள் தயாராகிவிட்டதாம்!

(கொழும்பு)

கடற்பிராந்தியத்தில் போர்நிறுத்த மீறல்களைத் தவிர்ப்பதற்கான சிறிலங்கா அரசாங்கத்தின் சிபார்சுகள் அடங்கிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக இந்தத் திட்டம் விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் எனப் படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடற்பிராந்தியத்தில் போர்நிறுத்த மீறலைத் தவிர்ப்பதற்கான யோசனைகள் அடங்கிய திட்டத்தினை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரசாங்கத்திடம் சமர்ப்பித்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அமைச்சர் மகிழ்ச்சி!

இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவை குறித்து மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் சமாதான நடவடிக்கைக்கும், பொருளாதார நடவடிக்கைக்கும் தேவையான முழு ஆதரவினை வழங்குவதற்கு அமெரிக்க அரசு தயாராக விருப்பதாகவும் அவர் தெரிவித்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இசை, நடன, நாடக 4ஆம்நாள் விழாவில் மூத்த கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவம்

(திருமலை)

திருகோணமலை உவர்மலையில் இடம்பெற்றுவரும் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடக விழாவில் திருமலை மாவட்டத்தின் ஆறு மூத்த கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு நேற்று நான்காவது நாளாக குறளமுதம் கா. விநாயகசோதி தலைமையில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க. சண்முகதாஸ் கருத்துரை வழங்கினார். திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காருண்யா சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நடனத்துறை - திருமதி சாரதா சிறிஸ் சுந்தராசா, சங்கீதம் - திருமதி இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி, கூத்துக் கலைஞர் - இராசையா தம்பிராசா, நாடகக் கலைஞர்- சிற்பி அமரசிங்கம், வயலின் - வே. சங்கரலிங்கம், இசையமைப்பு - தா. பத்மநாதன் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (25)

## சிறந்த பெறுபேறு



கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் கிளிநொச்சி புனித திரேசா

(08ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டராசிரியர் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது

திருகோணமலையில் வடக்கு-கிழக்கு மாகாண தொண்டராசிரியர்கள் மேற்கொண்டுவந்த போராட்டம் நேற்று நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த நாற்பது நாட்களாக தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு- கிழக்குக் கல்வி அமைச்சின் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்று வந்தது. நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சிறிலங்கா பிரதமருக்கும், இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே தொண்டராசிரியர்கள் இப்போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

## வரிவிளம்பரம்

### அறிவித்தல்

ஆரம்ப அறிவே இல்லாதவர்கள் D பெறுபேறு அடையச் செய்யும் 32 வருட அனுபவமுடைய கணித ஆசிரியா தொடர்பு:-K. ஆறுமுகநாதன் இல: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். மேலதிகவிபரம்யோ. இராசலட்சுமி,உலகளந்த பிள்ளையார் வீதி, 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. (சி-7736)

### தவறிவிட்டது

புவனேந்திரன் ஆகிய நான் முல்லைத்தீவில் இருந்து கிளிநொச்சிக்கு உழவு இயந்திரத்தில் பிரயாணம் செய்யும்போது முக்கியமான ஆவணங்களுடன் சூட்கேசும் உரப்பையொன்றும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (3071)

### உயர்கல்வி நிறுவனம் வட்டக்கச்சி

A/L 2004, 2005 இற்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம் 14-04.2003 பி.ப. 4மணி (திங்கள்) குறிப்பு: கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்யவும். சி.பவானந்தன் நிர்வாகி. (3078)

### அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி

2003 கலைப்பிரிவு மாணவர்களுக்கான தமிழ் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு 13.04. 2003 (ஞாயிறு காலை 9மணிக்கு) ஆசிரியர் திரு S. கணேசலிங்கம் B.A.Hons அவர்களால் தொடர்ச்சியாக நடாத்தப்படும் .சி.பவானந்தன் நிர்வாகி. (3076)

### அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி

A/L 2004,2005ஆம் ஆண்டிற்கான, கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம். 14-04-2003 பி.ப. 3.00மணிக்கு. குறிப்பு: கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு யாழ் பிரபல ஆசிரியரின் சேவை பெறப்படும். சி.பவானந்தன் நிர்வாகி. (3077)

### தவறிவிட்டது

குமுழமுனை 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா- பத்மநாதன் (குஞ்சன்) என்பவருடைய தேசிய அடையாள அட்டை உட்படவேறு சில முக்கிய ஆவணங்களும் குமுழமுனைக்கும் , பூதன் வயல் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தண்ணீரூற்று வன்னியன் கட்டடப் பொருள் வாணிபத்தில் வழங்கி சன்மானத்தைப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகவல் க.குஞ்சன். (சி-7737)


# கிளி,முல்லைமாவட்டங்களில் க.பொ.த.(சா/த) முன்னணிப்பெறுபேறுகள்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் கிளிநொச்சி, முல்லை மாவட்ட பாடசாலைகளில் கிடைக்கப்பெற்ற முன்னணிப் பெறுபேறுகளும் பாடசாலைகளின் பெயர் விபரம்பின் வருமாறு:-

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி

சி. உமைசொரூபி 9ஏ.சி. வி.வர் மாஜினி 5ஏ,2பி,2சி,. எஸ் கே.ஜெயநிதி 5ஏ.2பி,சி சிந்துஜா 4ஏ.3பி,2சி,

கிளிநொச்சி மகா வித்தியாலயம்

சி.எழில்வேள் 8ஏ.2சி யோ.ஆரணி 7ஏ,பி,2சி

கனகபுரம் ம/வி

ம.உசாகரன் 8ஏ,சி,எஸ்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி

த.சுஜந்தன் 5ஏ.3பி.சீ,எஸ் ச.விஜயகாந்தி 5ஏ,2பி,2சி,எஸ். சி.காண்டீபன் 5ஏ.பி.சி.2எஸ்.

கிளிநொச்சி இந்துக்கல்லூரி

ச.கோபிதாஸ் 7ஏ.2பி,எஸ், சீ.கேமதர்சினி 6ஏ,2பி,சி, இ. சுதன் 6ஏ,2பி,எஸ்.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

ம.ரூபவண்ணன் 7ஏ,2பி, சி.பா.லிசாமிலா 4ஏ,பி,4சி,எஸ் ந. சதீஸ்குமார் 4ஏ.3பி,2சி,எஸ்.

பூநகரி கறுக்காய் தீவு ம/வி

பா.தேவரதன் 3ஏ,3பி,3சி, வி.கோவிமுகுந்தன் 3ஏ,2பி,4சி.

இராமநாதபுரம் ம/வி

செ.பிரகாஸ் 5ஏ,4சி,எஸ், திஜானுகா 4ஏ,3பி,2சி,எஸ் தி.தர்மினி 3ஏ, 2பி,3சி,2எஸ், ஜே.சியானா 3ஏ, பி,5சி,எஸ் ஆர். யாழினி 2ஏ,2பி, 5சி,எஸ். எஸ். சஜெந்தினி 2ஏ,பி, 4சி,2எஸ்.கி.மைதிலி 2ஏ, 3சி,4எஸ்.

முல்லைத்தீவு மகா வித்தியாலயம்

மரியநாயகம் ஜெறோம் - 7ஏ 2பி,2சி, ஆரோக்கியநாதர் பகிரதன் 5ஏ, பி, 3சி, அன்ரன் பெனடிற் யோசேப் 3ஏ, 4பி, சி, எஸ். கனகராசா லதா3ஏ, 3பி,3சி

அளம்பில் றோ.க.வித்தியாலயம்

கை. நிறோஜா 3ஏ,3சி,2எஸ். கி. சந்திரவேணி ஏ.பி, 3சி,2எஸ், ரூபிணி ஏ.பி, 2சி,2எஸ், யே. கஷ்சன் ஏ,2பி,சி,5எஸ், ஜே.அன்ரனிசிங் ஏ,4சி,3எஸ் ஏ. லெனிற்றி ஏ.பி,4எஸ்.

செம்மலை ம.வி.

இ. யசோதா 4ஏ, 4பி, 2சி, பொ. கிருசன் 2ஏ, 3பி, 3சி, 2எஸ், இ. வேணுகோபாலசங்கர் 2ஏ, பி,5சி,2எஸ், அ.கம்சியா 2ஏ,4சி,4எஸ் யோ. சுகிர்தா 2ஏ, 5சி, எஸ்.

பாண்டியன்குளம் ம.வி.

த. சியாமளா 2ஏ, 4சி, 2எஸ், இ. மாலினி ஏ, 3சி.3எஸ், க. அனுஷா ஏ,பி, 2சி, 2 எஸ்.

# பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் ஓராண்டு நிறைவுவிழா நேற்று

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் பெண்கள் தொழில் பயிற்சி நிறுவனத்தின் ஓராண்டு நிறைவு விழா நேற்று பி.ப.3.00 மணிக்கு கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்ட மகளிர் ஒன்றியத்தலைவி திருமதி செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை திலீபன் நடமாடும் மருத்துவப் பிரிவின் பொறுப்பாளர் வைத்தியகலாநிதி தேவா அன்ரி, கிளி.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கௌரி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து வரவேற்புரையினை தொழிற்பயிற்சி நிறுவன முகாமையாளர் கொலின் நிகழ்த்தினார். தலைமையுரையினையடுத்து சிறப்புரையினை மேற்படி நிலைய துணைப்பொறுப்பாளர் தமிழ் இசை நிகழ்த்தினார். தொடர்ந்து பயிற்சியாளர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

மேற்படி நிறுவனத்தினரால் தையல் பயிற்சி, துணி அலங்காரம், உணவு பதனிடும் பயிற்சி, தட்டெழுத்து கணினிப்பயிற்சி என்பன பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)





# முல்லை கமநல அபிவிருத்தி திணைக்களம் திறந்துவைப்பு

முல்லை மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ கட்டடம் முல்லைத்தீவில் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தலைமையில் மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் அவர்களால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து தொழில்நுட்ப அலுவலர் காரியாலயத்தை கடற்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன் திறந்து வைத்தார். உதவி ஆணையாளர் அலுவலகத்தை மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் திறந்து வைத்தார். பெயர்ப்பலகையினை மாவட்ட உள்ளூராட்சி உதவிஆணையாளர் இராசையா திரைநீக்கம் செய்துவைத்தார்.

ஆசியுரையினை கள்ளப்பாடு ஞானவைரவர் ஆலய பிரதமகுரு தங்கவேலாயுதம், சிலாவத்தை பங்குத்தந்தை வண. பிதா. றொபின்சன் அடிகள் ஆகியோரும். தொடர்ந்து தலைமையுரையினை உதவி ஆணையாளர் தர்மலிங்கமும், வரவேற்புரையினை பெரும் பாக அபிவிருத்தி உத்தியோகத்தர் மகாதேவராசாவும் ஆற்றினர்.

சிறப்புரைகளை அரச அதிபர், நியாப் திட்ட பிரதிப் பணிப்பாளர் சிவகுமார்,மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டப் பொறுப்பாளர் இ.மாறன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆகியோர் நிகழ்த்தினர். (26, 20)

## துவிச்சக்கரவண்டி திருட்டு

வட்டக்கச்சி கட்சன்வீதிப் பகுதியில் துவிச்சக்கர வண்டியொன்று திருட்டுப்போயுள்ளது.

125 இலக்க வீட்டில் பூட்டப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி கடந்த திங்களன்று அதிகாலை 3.00மணியளவில் திருட்டுப்போயுள்ளது. இது தொடர்பாக காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (12)

## விளையாட்டுப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளான கரைச்சி, கண்டாவளை, பளை,பூநகரி பிரிவுகளுக்கிடையிலான மாவட்ட பெருவிளையாட்டு விழா எதிர்வரும் 17,18,19,20ஆம் திகதிகளில் காலை 8.00 மணி முதல் கிளிநொச்சிபொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதென மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சு.கனகராசா தெரிவித்துள்ளார். (சோ)

## விசேட கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணியளவில் நடைபெற விருப்பதால் அனைத்து மாணவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர். (அ)

## முல்லை கரையோரப் பகுதிகளில் கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்வு

முல்லைத்தீவுக் கரையோரப் பிரதேசங்களான மாத்தளன் தொடக்கம் செம்மலை வரையான கிராமங்களில் வெண்புறா கண்ணி வெடி அகற்றும் பிரிவினரும், யுனிசெவ் நிறுவனமும் இணைந்து கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். ஒலிபெருக்கி மூலமான செய்தியினையும், துண்டுப்பிரசுரம் மூலமாகவும், கிராமிய ரீதியாக கருத்துரைகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முல்லைப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறிவருவதால் இராணுவத்தினர் புதைத்துவிட்டுச்சென்ற வெடிபொருட்களும், விமானத் தாக்குதல் மூலமும் புதையுண்ட வெடிபொருட்களும் ஆங்காங்கே காணப்படுவதால் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும்நோக்குடனேயே இச்செயற்பாடுகள் நடைபெறுகின்றன. (20)


## நியூட்டன் அக்கடமி வட்டக்கச்சி

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

- O/L மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புகள் (Day Classes)
  **ஆரம்பம் : 21-04-2003 (முற்பகல் 9.00 மணி)**
- A/L 2005 கலை, வர்த்தக வகுப்புக்கள்
  **ஆரம்பம் : 14-04-2003 (பிற்பகல் 3.00 மணி)**

**கணினிப் பிரிவு II** ஆரம்பம் : 14-04-2003 (முற்பகல் 9.30)

(கணினிப் பிரிவிற்கான பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்வதுடன் மேலதிக தகவல்களை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும்.)

**குறிப்பு:** உயர்தர மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட்பம் (General In formation Technology-GIT) சம்பந்தமான அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளும்முகமாக எமது மாணவர்களுக்கு இலவச வகுப்புக்கள் நடைபெறும்.

(சி-8066) **-நிர்வாகம்.**

## கந்தன் களஞ்சியம்

லுமாலா சயிக்கிள்
ஹீரோ – சயிக்கிள்

மற்றும் சகலவிதமான பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

**கந்தன் களஞ்சியம்** யாழ்.சாலை(கரடிப்போக்கு) கிளிநொச்சி

(சி-7836)

# ஈராக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும் வரை அரசியல் நடவடிக்கைக்கு அமெரிக்காவே பொறுப்பாக இருக்கும்

## அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் அறிவிப்பு

(வாஷிங்டன்)

**ஈராக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் நிலைவரும் வரை அமெரிக்காவே அங்கு அரசியல் நடவடிக்கைகளுக்குப் பொறுப் பாக இருக்கப்போகிறது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவின் 'லொஸ் ஏஞ்சல் டைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஈராக்கை சதாம் ஹுசைனிடமிருந்து விடுவித்த பிறகு அமெரிக்க கூட்டணிப் படையினர் விலகி ஐ.நா.வின் பாதுகாப்புச் சபைக்கு வழிவிடப்போகிறது என்று சில நாடுகள் கருதுகின்றன. இது தவறான கருத்தாகும்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணி ஒதுங்கி நின்று கொண்டு பாதுகாப்புச் சபை எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொள்ள அனுமதி பெறப்போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு; தெரிவிக்கப்பட்டும் விட்டது என்று மேலும் அவர் கூறினார்.

யுத்தத்தின் பின்னர் ஈராக் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உதவும் ஒரு முக்கிய பயணத்தை மேற்கொண்டு ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் அடுத்த வாரம் ஏதென்ஸ் செல்கின்றார்.

தனது உத்தேச பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் ரஷ்ய விஜயத்தை இரத்துச் செய்துவிட்டு அவர் கிரேக்க அதிபர் கொஸ்டாஸ் சிமெட்டிஸின் அழைப்பை ஏற்று ஏதென்ஸ் செல்கின்றார்.

அங்கு 16ஆம் திகதி ஆரம்பமாகும் ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

இக்கூட்டத்தின் போது பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், பிரெஞ்சு அதிபர் சிராக், ஜேர்மனி அதிபர் ஸ்குரூடர் ஆகியோரைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

இம்மூன்று நாடுகளும் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களாகத் திகழ்கின்றன. ஐ.நா. செயலாளர் இவ் விஜயத்தின் பின்னர் ரஷ்ய அதிபரைச் சந்திக்கச் செல்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏதென்ஸ் விஜயத்தின் போது கொபி அனான் யுத்தத்தின் பின்னரான ஈராக்கில் ஐ.நா. சபை எவ்வாறான பங்களிப்பைச் செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஐரோப்பிய யூனியன் தலைவர்களோடு விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

யுத்தம் முடிந்த பின்னர் மனிதாபிமான உதவிகளும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படும் என பொதுப்படையாகச் சொல்லப்படுகின்றதே தவிர இதுவரை எந்த நாடும் எந்தவொரு திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை.

அமெரிக்காவும் பிரிட்டனும், தாமே இடைக்கால அரசு தொடர்பான விடயங்களைக் கவனித்துக்கொள்ளப்போவதாகவும், ஐ.நா.வின் பணி மனிதாபிமான உதவிகள் தொடர்பாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன.

புதிய அரசு அமைக்கப்படுவதில் ஐ.நா.முக்கிய பங்காளியாக இருக்காது என்றும் ஆலோசகராக மட்டுமே இருக்கும் என்றும் இந்நாடுகள் தெரிவிப்பதை பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி நிராகரித்துள்ளதோடு ஈராக்கை மீளமைப்பதில் ஐ.நா.வின் பங்கு பெரிதாக இருக்க வேண்டுமென வற்புறுத்தி வருகின்றன.

இவ்வாறான சூழலில் ஐ.நா. சபையின் முக்கிய உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து அவற்றிடையே ஒரு பொதுத் தன்மையை எட்டுவதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் முயற்சிப்பார் எனத் தெரிகின்றது.

திங்களன்று ஐ.நா. செயலாளர் செய்தியாளர்களைச் சந்தித்த போது, பல வழிகளில் ஐ.நா. ஈராக்கில் தனது பங்களிப்புக்களைச் செய்யமுடியும் என்றும் எல்லாவற்றுக்கும் மேலாக ஈராக்கில் ஐ.நா. நேரடிப் பங்களிப்புச் செய்வது என்பது ஒரு சட்ட ரீதியான அந்தஸ்தை அந்நாட்டிற்கு வழங்குவதாக இருக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈராக்கின் பெரும் பகுதியைக் கைப்பற்றிவிட்ட அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசைன் எங்கு தப்பிச் சென்றார் என்று அறிய அவரது அரண்மனைகளை தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

பாக்தாத் வெளியே உள்ள நகரையும் கூட்டுப்படைகள் கைப்பற்றிவிட்ட நிலையில் அங்குள்ள விலையுயர்ந்த பொருட்கள் களவாடப்படுவதும், சதாம் ஹுசைனின் சிலைகள் உடைக்கப்படுவதும் வழக்கமான செயல்களாகிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

அதே நேரத்தில் ஈராக்கின் பெரும்பாலான இடங்களில் மக்கள் உணவின்றி பசியால் தவிப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலை மாற ஈராக்கிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும் என ஐ.நா. செயலாளர் கொபிஅனான் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈராக் தற்போதைய நிலையை அடைய கொடுத்த விலை அதிகம் தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் புதிய அரசு அமைப்பது பற்றி அமெரிக்கா அமைத்துள்ள கவுன்சில் இன்று விவாதிக்க உள்ள நிலையில் அதற்குப் போட்டியாக புதிய அரசு அமைப்பது பற்றி ரஷ்ய அதிபர் புட்டின், ஜேர்மன் பிரதமர் ஜக்ஸ் ஸ்குடர், பிரான்ஸ் அதிபர் ஜக்ஸ் ஸ்ராக் ஆகியோர் நேற்றும், இன்றும் எல்லோவில் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

## ஈராக் தொடர்பாக ஐ.நா விவாதிப்பதில் பயனில்லை!

**— பிரிட்டிஷ் பிரதமர்**

ஈராக்கின் நிலை தொடர்பாக ஐ.நா.சபை தொடர்ந்தும் வாதப் பிரதிவாதங்களை நடத்துவதில் பயனில்லை என்று பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வட அயர்லாந்தில் அமெரிக்க சனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. சபை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## விமானத்திலிருந்து செயற்படும் தொலைக்காட்சி நிலையம்

(பாக்தாத்)

ஈராக்கிய மக்கள் மனதில் இடம்பிடிக்கும் பொருட்டு கூட்டணிப்படையினர் புதிய விமான ஒலிபரப்பு தொலைக்காட்சி நிலையத்தினை நிர்ணயித்துள்ளனர். "விடுதலையை நோக்கி" என்ற இப்புதிய தொலைக்காட்சி நிலையம் கமாண்டோசோலோ என்று அழைக்கப்படுகிறது. நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட கொமாண்டோ விமானத்தில் இருந்து ஒலிபரப்பு செயற்படுகின்றது. அதில் வெளியான ஒலிபரப்பில் ஈராக் நாட்டை அமெரிக்காவோ பிரிட்டனோ அல்லது ஐ.நா.வோ ஆட்சி செய்யாது. ஈராக்கியர்களே இங்கு ஆட்சி நடத்துவர் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் ஆகியோர் கூறியுள்ளனர்.

## நீதிமன்றத்தீர்ப்பு எப்படி வரினும் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவோம்

**- விஸ்வஹிந்து பரிஷத் அறிவிப்பு**

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தில், உச்ச நீதிமன்றம் தடைவிதித்தாலும் அதையும் மீறி ராமர் கோயில் கட்டுவோம் என விஸ்வ ஹிந்து பரிஷத் அறிவித்துள்ளது.


அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பாக அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நடந்துவரும் வழக்கு விசாரணைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

அத்துடன் தொல்லியல் துறையினரின் கோரிக்கையை ஏற்று, பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயில் இருந்ததா என்பதைக் கண்டறிவதற்கான அகழ்வாராய்ச்சிப் பணிகளை முடிக்க நீதிபதிகள் மேலும் 05 வார கால அவகாசம் கொடுத்துள்ளனர்.


இதனால் வழக்கு விசாரணை முடிவடைந்து இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலும் விரைவில் தீர்ப்பளிக்கப்படும் என எதிர்ப் பார்க்கப்படுகின்றது.

ஒரு வேளை உச்ச நீதிமன்ற தீர்ப்பு நமக்கு எதிராக இருந்தாலும் திட்டமிட்டபடி அயோத்தியில் ராமர்கோயில் கட்டியே தீருவோம் என விஸ்வ ஹிந்து பரிஷத்தின் துணைத் தலைவர் திரு ஆச்சாரிய கிரிராஜ் கிஷோர் கூறியுள்ளார்.

ஜகப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராமர் கோயில் கட்டுவதற்கான திட்டங்களை வகுக்க விஸ்வ ஹிந்து பரிஷத்தின் உயர் மட்டக்குழு எதிர்வரும் 29 ஆம் திகதி கூடவிருப்பதாகவும் கூறியுள்ளார்.



ஈராக்கில் எரிந்து கொண்டிருக்கும் கட்டடம்



ஈராக்கிய இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட இயந்திரத் துப்பாக்கியை சேதமாக்கும் அமெ. கடற்படைச் சிப்பாய்.

## இன்சாட் – ஏ–3 யை இந்தியா ஏவியது

(புதுடில்லி)

இந்தியாவின் பல நோக்கு இன்சாட் ஏ-3 செயற்கைக்கோள் இப்போது விண்வெளியிற்கு ஏவப்பட்டுள்ளது. இடைநிலை சுற்றுப்பாதையில் செல்லும் இது 260 கிலோ மீற்றரில் இருந்து 11500 கிலோமீற்றர் சுற்றுப்பாதையில் புவியை வலம்வரும்.

இச்செயற்கைக் கோளில் எல்லாக் கருவிகளும் சரியாகச் செயற்படுகின்றன என பெங்களூரில் உள்ள கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.





1) உலக ஆரோக்கியதினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
ஏப்ரல் - 7

2) உலக ஊனமுற்றோர் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
மார்ச் - 15.

3) தலைநகர் அல்லாத உலகின் மிகப்பெரும் நகரம் எது?
சீனாவிலுள்ள ஷாங்காய்

4) பாகிஸ்தான் குடியரசான ஆண்டு எது?
1956ஆம் ஆண்டு

5) இந்திய தலைமைத்தேர்தல் ஆணையாளரின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள்?
ஆறு ஆண்டுகள்

6) இந்தியாவில் மக்கள் நெருக்கம் குறைந்த மாநிலம் எது?
அருணாசலப் பிரதேசம்

7) தனது ஒன்பதாவது வயதிலேயே இந்திய விளையாட்டு ஆணையகத்தின் உதவித் தொகை பெற்ற கால்பந்தாட்டக்காரர் யார்?
பாங்சுங்பூட்டியா

8) உலக தண்ணீர்தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
மார்ச் - 22

9) இலங்கையில் அதிகயாக தென்னை பயிரிடப்பட்டுள்ள மாவட்டம் எது?
குருநாகல் மாவட்டம்

10) கருக்கட்டல் நடைபெறாது பூவிலிருந்து கனி உருவாதலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
கன்னிக்கனியமாதல்.

11) உயர் வெப்பநிலையில் தடைப் பெறுமானம் பூச்சியமுடைய கடத்திகளை எவ்வாறு அழைப்பர்?
மீகடத்திகள்.

12) உலகின் ஆறு இல்லாத நாடு எது?
சவுதி அரேபியா

13) அவரையை அதிகம்பயிரிடும் நாடு எது?
அமெரிக்கா.

14) கோபிபாலைவனம் எங்குள்ளது?
மங்கோலியாவில்

15) கடல்நீரை மட்டுமே பருகும் பறவை எது?
பென்குயின்

16) உலகில் சுரங்கப்பாதைகள் அதிகமுள்ளநாடு எது?
நோர்வே

17) உலகில் மிகப் பழமையான விளையாட்டு எது?
போலோ

18 உலகில் எந்த நாட்டில் முதல் முதலில் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன?
பிரான்ஸ்

19) ஒன்பது கோள்களில் மிக வேகமாகச் சுற்றிக்கொண்டிருப்பது எது?
புதன்

20) மத்திய கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவின் தலைநகர் எது?
கிகாலி

21) கிழக்கு ஐரோப்பிய நாடான ருமேனியாவின் தலைநகர் எது?
புகாரெஸ்ட்

22) வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள பின்லாந்து நாட்டின் மொத்தப் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர்கள்?
3,38,000 சதுர கிலோமீற்றர்.

# விண்வெளியில் வலை பின்னிய சிலந்தி

மனிதன் சந்திரனுக்குச் சென்றான். லைக்கா நாய் சென்றது எமக்குத் தெரியும். ஆனால், சிலந்திகளும் விண்வெளிக்குச் சென்றது தெரியுமா?

சிலந்திகள் விண்வெளிக்குச் சென்றது மட்டுமல்லாது அங்கு தன் கைவரிசைகளையும் காட்டி வலைகளையும் பின்னியிருக்கின்றது.

NASA விண்வெளி ஆய்வு மையம் விண்வெளியில் சிலந்திகளின் வலை பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இரண்டு சிலந்திகளுக்கு அந்த அதஷ்டம் கிட்டியது.சிலந்திகள் அங்கேயும் வலை பின்னி தங்கள் கைவண்ணத்தைக் காட்டின.

இந்தச்சிலந்திகள் மண்ணில் பின்னிய வலைக்கும் விண்ணில் பின்னிய வலைக்கும் வேறுபாடு இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

மேலும் வலையின் பட்டு இழைகள் மண்ணில் இருந்ததை விட இருபது வீதம் மெல்லியவையாகக் காணப்பட்டன.

இச்சிலந்திகள் விண்வெளியில் ஐந்து வலைகளைப்பின்னின. அவற்றில், நான்கு சிறியவை. இவற்றின் இழைகளின் திருப்பு முனைகள் தெளிவாகக் காணப் படவில்லை. அடுத்து அடுத்து உள்ள ஆர இழைகளைத் தொடராகச் சுற்று இழைகளும் காணப்பட்டுள்ளன.

புவியீர்ப்பு விசையே இல்லாத விண்வெளியில் சிலந்திகள் வலை பின்னி விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

## பல மொழிகளில் பலாவின் பெயர்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | - | ஜெக் (Jack) |
| பிரெஞ்சு | - | ஜெக்குயர் (Jucquier) |
| ஜேர்மன் | - | ஜெக்காபௌம் (Jucabaum) |
| ஹிந்தி | - | காதல் (Kathal) |
| ஓரிசா | - | பொனோஸ் (Ponose) |
| தெலுங்கு | - | பனாசு (Panasu) |
| உருது | - | கடஹல் (Katahal) |
| குஜராத்தி | - | வனாஸ் (Vanas) |
| மலையாளம் | - | சக்கா (Chakka) |
| பெங்காலி | - | காந்தல் (Kanthal) |
| சமஸ்கிருதம் | - | பனாசா (Panasa) |
| சிங்களம் | - | கொஸ் (Kos) |

## கின்னஸ் சாதனை

ஐக்கிய அரபு எமிரேட்சின் மன்னரான ஷெய்க் ரஷீட்பின் சைட் அல் மக்தூமின் புதல்வர் மொஹமட் சல்மாகுமாரி இவர்களது திருமணம்தான் உலகில் ஆகக்கூடிய செலவில் செய்யப்பட்ட திருமணம் ஆகும்.

இத்திருமணம் 1981 மே மாதம் டுபாயில் நடைபெற்றது. இத்திருமண வைபவம் ஒருவாரம் முழுவதும் நடைபெற்றுள்ளது.

இதற்காக செலவிடப்பட்ட பணம் இலங்கை ரூபாவில் சுமார் 4450 மில்லியன் ரூபா.

20,000க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் அமர்வதற்கென்றே ஒரு ஸ்டேடியம் விசேடமாக நிர்மாணிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# இரத்த வகை மாறியதால் செயற்பட மறுக்கும் இருதயம்

இரத்த வகை மாறியதால் இளம் பெண்ணின் இருதயம் செயற்பட மறுக்கிறது. அமெரிக்காவில் வடக்குக் கரோலினாப் பகுதியைச் சேர்ந்த 17 வயதுப் பருவப் பெண் ஜெசிகா இருதய நோய், நுரையீரல் நோயால் பாதிக்கப் பட்டார். அவருக்கு இருதயம், நுரையீரல் மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. 3ஆம் நாள் மாரடைப்பு ஏற்பட்டு உடல்நிலை மோசமானது. ஜெசிகாவுக்கு ஓ-குருப் இரத்தம் ஆனால் ஏ- குருப் இரத்த வகையைச் சேர்ந்த ஒருவரின் இருதயம் ஜெசிகாவுக்குப் பொருத்தப்பட்டது. அதை அவரது உடல் ஏற்றுக்கொள்ள வில்லை.புதிய இருதயம் செயற்பட மறுத்தது. என் மகள் உயிர் பிழைக்க இருதயம், நுரை யீரல் மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்பதால் அறுவைச் சிகிச்சை செய்யச் சம்மதித்தோம்.ஆனால், டாக்டர்கள் தவறு செய்து விட்டனர். இப்போது அவள் மரணத்துடன் போராடுகிறாள். எந்த நேரத்திலும் உயிர் பிரியும் அபாயக் கட்டத்தில் இருக்கிறாள் என அவரது தாயார் கண்ணீர்மல்கக் கூறினார்.

## மனிதரைப் பார்த்துச் சிரிக்கும் இயந்திர மனிதன் தயார்

மனிதர்களைப் பார்த்துச் சிரிக்கும் இயந்திர மனிதனை டெக்கோஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர் வடிவமைத்துள்ளார்.

ரோபோ எனப்படும் இயந்திர மனிதன் வெளிநாடுகளில் பிரபலமாகி வருகிறான் நட்சத்திர ஓட்டல்களில் வரவேற்பாளர் அறையில் இயந்திர மனிதன் வைக்கப்பட்டுள்ளான் அது இயந்திரம் மாதிரி இருக்கும். இப்போது மனிதனைப் போல முகத்தோற்றம் அளிக்கும் இயந்திர மனிதன் தயாரிக் கப்பட்டுள்ளது. அந்த இயந்திர மனிதனின் முகத்துக்குப் பின்னால் அதி நவீன கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. அது ஒரு விநாடியில் 24 விதப் பாவனையைச் செய்யும் ஆற்றல் கொண்டதாகும். அவற்றின் மூலம் தனக்கு முன்னால் வரும் ஆளைப் பார்க்க முடியும். சிரிக்க முடியும். கோபமாக முகத்தைச் சுளிக்க முடி யும் டெக்சாஸ் டெல்லஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டேவிட் ஹன்சன் அதை வடிவமைத்து இருக்கிறார்.

## போக்குவரத்துப் பொலிஸாரைக் கண்காணிக்கும் இரகசிய காமிரா

மெக்சிக்கோவில் முக்கிய சாலைகளில் போக்குவரத்துப் பொலிஸாரைக் கண்காணிக்க இரகசிய காமிராக் களைப் பொருத்தியுள்ளனர். வாகன ஓட்டிகளிடம் போக்குவரத்துப் பொலிஸார் இலஞ்சம் வாங்கும் பழக்கம் உள்ளது. அத்தகையவர் களைக் கண்காணிப்பதற்காக இரகசிய காமிராக்களைப் பொருத்தி உள்ளனர். அதன் பயனாக ஒரு பொலிஸ்காரர் இலஞ்சம் வாங்கிய போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். அவருக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட உள்ளது. அதே போன்று இலஞ்சம் கொடுத்தவருக்கும் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அபராதமும் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

## தத்துவஞானி சாக்ரடீஸ்

தத்துவ ஞானி சாக்ரடீஸ் சிக்கனக்காரர். செருப்புக்கூட அணிவதில்லை. ஆனால் அடிக்கடி கடைவீதிக்குச் சென்று என்னென்ன பொருட்கள் உள்ளன என்று பார்ப்பார். ஒருநாள் நண்பர் காரணம் கேட்டார். "அங்குள்ளதில் எத்தனை பொருட்கள் இல்லாமல் என்னால் வாழ முடிகிறது. என்று பார்ப்பதற்காகப் போகின்றேன்" என்றார் சாக்ரடீஸ்.

"ஆன்மீகம் என்பது, உனக்கு என்ன தேவை என்று அறிவது இல்லை; தேவையற்றது எது? என்பதை புரிந்து கொள்வதே" என்று மேலும் கூறினார் சாக்ரடீஸ்.

## ஆபிரகாம் லிங்கன் கூறியவை

#சேமிப்பை அலட்சியப்படுத்தி வளத்தைக் கொண்டுவர முடியாது.
#வலிமையை வலுவிழக்கச் செய்து பலவீனத்தைப் பலப்படுத்த முடியாது.
#கூலி கொடுப்பவனை ஊனமாக்கி கூலி வாங்குபவனுக்கு உதவமுடியாது.
#பணக்காரனை அழித்து ஏழைகளை உயர்த்த முடியாது
#கடன் வழங்கும் பணத்தின் மூலம் தேவையான பாதுகாப்பை அடைய முடியாது.
#சம்பாதித்ததை விட அதிகமாக செலவு செய்தால், செலவுசெய்யும் தொல்லையிலிருந்து மீள முடியாது.
#மனித சுதந்திரத்தைப்பறித்து நன்னடத்தையையும், ஊக்கத்தையும் உண்டாக்க முடியாது.
#மக்கள் தாங்களே செய்து கொள்ளக் கூடிய - செய்துகொள்ள வேண்டிய காரியங்களை நீ செய்து, மக்களுக்கு நிரந்தமாக உதவ முடியாது.

## ஓவியத்தின் ரகசியம்

உலகப்புகழ்பெற்ற மோனலிசா ஓவியத்தின் மந்திரப் புன்னகையின் ரகசியத்தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மோனலிசா ஓவியம் இன்று வரை. அழியாத புகழுடனும் மாறாத புன்னகையுடனும் இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிய ஓவியத்தை எக்ஸ்-ரே படம் எடுத்துப் பார்த்தார்களாம்

மோனலிசாவின் உருவப்படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று முறை வரையப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ள

☐ உலகில் 600கோடி மக்கள் 9000 மொழிகளைப் பேசுகின்றனர். இதில் 12 மொழிகளே அதிகமாக மக்களால் பேசப்படும் மொழிகளாகும்.

☐ நெருப்புக் கோழியின் கண் அதன் மூளையை விடப் பெரியது.

☐ மனித இரத்தத்திற்கு மாற்றாக செயற்கை இரத்தம் விரைவில் உலக சந்தையில் விற்பனைக்கு வரவுள்ளது. இந்த செயற்கை இரத்தம் எந்த 'குரூப்' இரத்தம் உள்ளவர்களுக்கும் பயன் படுத்தக் கூடியது.

☐ அதிக கூர்மையான கண் பார்வை உடையவர்கள் அஸர் பைஜான், போலாந்து, பிரிட்டிஷ், ஜப்பான் போன்ற நாடுகளில் அதிகம் வாழ்கின்றனர்.

☐ சுமார் 75 வயதைக் கடந்தும் இரு கண்களும் நல்ல கூர்மையான பார்வை யுடையவர்கள். அதிகமாக ரஷ்யா, ஆப்கானிஸ்தான், சவுதி அரேபியா, பிரேசில் போன்ற நாடுகளில் வாழ் கின்றனர்.

## நவீன அதிவேக மோட்டார் சைக்கிள்

அமெரிக்காவில் மணிக்கு 400 மைல் வேகத்தில் செல்லும் அதிவேக மோட்டார் சைக்கிள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள சிக்காகோவில் ஓட்டோ ஷோ நடைபெற்றது. அதில் பிராமண்டமான மோட்டார் சைக்கிள் ஒன்று இடம் பெற்றிருந்தது. டோம் ஹாவ்க் என்ற பெயர் கொண்ட அந்த மோட்டார் சைக்கிள் மணிக்கு 400 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. ஆனால், அதில் ஒருவர் மட்டுமே பயணம் செய்ய முடியும்.

# முதலுதவி ஆலோசனைகள்

• காசு போன்ற சிறு பொருட்களை குழந்தைகள் விழுங்கிவிட்டால், குழந் தையை மடியில் குப்புறப் போட்டு தலையை முன் புறமாக தொங்கவிட்டு முதுகில் மெதுவாகத் தட்டிக் கொடுத்தால் தொண்டையில் மாட்டிக் கொண்ட பொருள் வெளியே வரும்.

• இறைச்சியின் எலும்பு, மீன் துண்டு, முள் போன்றவை தொண்டையில் சிக்கிக் கொண் டால், படுக்க வைத்து வாயை அகலத் திறந்து மெதுவாக அடைப்பை எடுக்கலாம். அல்லது ஒரு கதிரை யில் அமரவைத்து முதுகில் விரலால் தட்டித் தட்டி வெளியேற் றலாம்.

• காதுக்குள் பூச்சி போனால், குச்சி, ஊசி, ஹேர்பின் விட்டு எடுக்கக் கூடாது. காதுக்குள் டோச் லைட் அடித்தால் பூச்சி வெளியே வரும். அல்லது சுத்தமான தண்ணீர் ஊற்றலாம்.

• கண்ணில் தூசி விழுந்தால் உடனே கண்ணைத் தேய்ப்பது தவறு. விழியை அசைக்காமல் சுத்தமான நீர்விட்டுக் கழுவ லாம்.

• கண்ணில் அடிபட்டால் ஐஸ் கட்டி வைக்கலாம். ஆசிட், கெமிக்கல் புகை பட்டால் சுத்த மான நீரால் கண்ணைக் கழுவ வேண்டும். கைகளாலோ, துணி களாலோ துடைக்கக் கூடாது.

• கழுத்தில் பலமாக அடிபட்டால் அசைக்கவே கூடாது காலர் போட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். இல்லையெனில் கழுத்து நரம்பு பாதிக்கப்பட்டு மூச்சு நின்று விடக் கூடும்.

• வலிப்பு வந்தால் சாவி போன்ற இரும்புப் பொருட்களைக் கொடுக்கக் கூடாது. சுவர், கட்டில், கதிரை எதிலாவது இடித்து இரத்தக் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வலிப்பு தானே நின்றுவிடும்.

• கொதிக்கும் நீர் போன்ற கொதி திரவங்கள் உடலில் ஊற்றப்பட்டு விட்டால், முதலில் ஆடையைக் கழற்ற வேண்டும். பெரிய தீக் காயமாக இருந்தால் சாக்கைத் தண்ணீரில் நனைத்து உடலில் சுற்றிக் கொள்ள வேண்டும்.

• உடலில் எங்காவது அடிபட்டு இரத்தம் வந்தால், சிறிய காயம் தானே என்று அலட்சியப் படுத்தக் கூடாது. உடனே சுத்தமான துணி யால் அழுத்திப் பிடித்து ரத்தத்தை நிறுத்த வேண்டும். பின்பு காயத் திற்கு வைத்தியரிடம் சென்று மருந்தோ, தையலோ போட வேண்டும்.

• வலிப்பு வந்த நபர் மயக்க மடைந்தால், ஒரு பக்கமாக சாய்த் துப் படுக்க வைக்க வேண்டும். இல்லையென்றால், எச்சில், வாந்தி மூச்சுக் குழாய்க்குள் சென்று ஆபத்தாகிவிடும்.

• கெட்டுப்போன உணவு சாப்பிட் டால், உணவு நஞ்சாகி சத்தி (வாந்தி) ஏற்படும். இதை நிறுத்த வைத்தியம் செய்து இரண்டு மணி நேரம் எதுவும் கொடுக்கக் கூடாது பின்பு இளநீர், தண்ணீர், தோடம் பழச்சாறு என்பன கொடுக்கலாம்.

• பல் சொத்தையினால் திடீரென வலி ஏற்பட்டால், கராம்பு எடுத்து வலிக்கும் பல்லில் வைக்கலாம். வலியினால் வீக்கம் ஏற்பட்டால், சூடான நீரினால் ஒத்தடம் கொடுக்கலாம்.

• பக்கவாதம் தாக்கினால், எச்சில், வாந்தி எதுவும் சுவாசப் பைக்குள் போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். போனால் ஆப்பிரேஷன் நிமோனியா எனும் நுரை யீரல் நோய் உண்டாகி அதுவே ஆபத்தாகிவிடும். பாதிக்கப்பட்ட வரை ஒருபக்கமாக திருப்பி சரியாகப் படுக்க வைக்க வேண்டும்.

• ஆஸ்மா திடீரென தாக்கி மூச்சுவிடத் திணறினால், முதலில் முதுகை நீவி ஆசுவாசப்படுத்த வேண்டும்.

**மாரடைப்பு வந்ததும்...**

"நெஞ்சில் திடீரென ஒருவலி, பின்பு அது கைகளில், கழுத்தில் படருகின்றது. மூச்சுவிடச் சிரமமாகின்றது" இவையெல்லாம் மாரடைப்பின் அறிகுறி.

நெஞ்சுவலி ஏற்பட்டதும் அது மாரடைப் பாக இருக்கும் என்ற சந்தேகம் வந்தால்....

• உடலை இறுக்கியபடி இருக்கும் உடைகளை தளர்த்திவிட வேண்டும்.

• சுற்றிநின்று ஆட்கள் இடைஞ்சல் தராது, நன்றாக காற்று வீசும் இடத்தில் படுக்க வைக்க வேண் டும்.

• நோயாளிக்கு உணவோ தண்ணீரோ கொடுக்கக் கூடாது.

• நோயாளியை அங்கும் இங்கும் அசைக்கக் கூடாது. எழவோ, நடக்கவோ அனுமதிக்கலாகாது. உடம்புக்கு வேலை கொடுத்தால் இதயம் மேலும் சோர் வடையும்.

• நோயாளிக்கு நினைவிருந்தால் பாதிபடுத்த நிலையில் தலை யணையை தாங்கல் கொடுத்து சாய்த்து உட்கார வைக்க வேண்டும்.

• இவற்றைவிட முக்கியம் சீக்கிரம் நல்ல வைத்தியரை அழைத்துவர வேண்டும் அல்லது வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

# கருநீல பெருஞ்செதில் நோய்

கண்ணுக்குத் தெரியாத சில நுண் கிருமிகளினால்த்தான் கருநீல பெருஞ் செதில் நோய் தோன்றுகின்றது. அதேபோல் ஜி-6.பி.டி. என்ற என்சைம் ரத்தத்தில் குறைந்தாலும் இந்த நோய் மனிதர்களைத் தாக்கலாம் என்று வைத்தியர்கள் கூறுகின் றார்கள்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் முழுவதிலும் தோலிலும் சளிச்சவ் வுகளிலும்கருநீலமாகச் செதில்கள் எல்லாம் வறண்டு கொஞ்சம் கொஞ்சமாக விழுந்து விடும்.

அதன்போது கடுமையான அரிப்பு (சொறி) ஏற்படும். இந்த கருநீல பெருஞ் செதில் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நகங்கள் பள்ளம் மற்றும் வெடிப்புக்களுடன் கறுப்பு நிறத்தில் காணப்படும்.

அதேபோல், இந்தநோய் தலையில் தாக்கும் போது முடியின் அடிமட்டக் குழிகள் பாதிப்படையும். மேலும் அந்த இடங்களில் உள்ள முடிகள் எல்லாம் உதிர்ந்து தழும்புகள் ஏற்படும்.

நோய்களைக் குணப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் சிலவகை மருந்தின் விளைவுகளாலும் இந்த கருநீல பெருஞ் செதில்நோய் தோன்றலாம்.

அத்துடன் நோயின் தாக்கத்தால் செதில்கள் உரிந்து பருக்களுடன் வேகமாக உடலின் மற்றைய பாகங்களுக்கும் பரவிக் கொண்டு வருவது ஆபத்தானது என்பதால் வைத்தியரை நாடுதல் வேண்டும்.

இது சாதாரணநோய் என்றாலும் இதன் பாதிப்புக்கள் பிறருக்கு அருவருப்பாக இருப்பதுடன் பாதிக்கப்பட்டவருக்கும் அரு வருப்பாகவே இருக்கும்.

# அஸ்மா (ஆஸ்துமா) நோயைக் கட்டுப்படுத்தும் உணவு

உணவுக் கட்டுப்பாடு மூலமும் அஸ்மா வைக் கட்டுப்படுத்தலாம் என அமெரிக்க டாக்டர் அலர்ஜி நிபுணர் கௌசிக் கூறி உள்ளார். அஸ்மா நோய் பரவலாகக் காணப்படுகிறது. சிறுவர்கள் மட்டுமின்றி முதியவர்களும் பாதிக்கப்படுகின்றனர். பனி, குளிர் காலத்தில் அதன் பாதிப்பு அதிகளவில் இருக்கும். சிலர் சிகரெட் புகை மற்றும் செல்லப் பிராணிகள் ஒத்துக் கொள்ளாமல் அஸ்மா நோயால் அவதிப் படுவார்கள்.அந்த நோயாளிகள் இன்கேலர் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். அதாவது மருந்துக் குப்பியை மூக்கில் வைத்து உறிஞ்சுவார்கள். உணவுக் கட்டுப்பாடு மூலமும் அஸ்மாவைக் கட்டுப்படுத்தலாம் என்று அமெரிக்க டாக்டர் அலர்ஜி நிபுணர் கௌசிக் கூறியுள்ளார். பால், முட்டை, கடலை வகைகள். கோதுமைப்பொருட்கள் சிலருக்கு ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம் அவர்கள் அந்த உணவுப் பொருட்கள் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். கொழுப்பு - சத்துள்ள பொருட்களைத் தவிர்க்க வேண்டும். இரவு படுக்கைக்குச் செல்வ தற்கு 3 மணி நேரத்துக்கு முன் சாப்பிடு வதன் மூலம் வயிற்றில் அமிலத் தன்மை யைச் சீராக வைத்திருக்க முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# இதயத் துடிப்பு

இதயத் துடிப்பு நிமிடத்திற்கு எவ்வளவு அடிக்க வேண்டும்?

பிறந்த குழந்தைக்கு:- 130 - 150 தடவை

ஒன்று தொடக்கம் இரண்டு வயதுக்குள்:- 110 - 120 தடவை

இரண்டு முதல் பத்து வயதுவரை:- 90 - 100 தடவை

பத்து முதல் பதினைந்து வயதுக்குள்:- 80 - 90 தடவை

பதினைந்து வயதிற்குப் பின்னர்:- 72 தடவை

ஆனால் இது சராசரிதான். சிலருக்கு சற்று கூடுதலாகவும், சிலருக்கு குறைவாக வும் இருக்கும்.

வயது வந்த ஒரு ஆணின் இதயத்தின் எடை 284-300 கிராம். வயது வந்த பெண்ணின் இதயத்தின் எடை 227 -340 கிராம் எனவும் கூறப்படுகின்றது.

சாதாரண மனிதனின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 72 முறை துடிக்கின்றது. அதாவது ஒரு மணி நேரத்தில் 103680 முறை துடிக்கின்றது. ஒரு வருடத்தில் 3783120 முறை துடிக்கின்றது.

இதயத்துடிப்பு சாதாரணமாக காலையில் குறைவாகவும், பிற்பகலில் அதிகமாகவும் துடிக்கின்றது.

குளிர்காலத்தைவிட கோடை காலத்தில் இதயத் துடிப்பு அதிகமாகக் காணப்படும். இரத்தத்திலுள்ள பிராணவாயு அதாவது ஒட்சிசனில் 70 சதவிகிதத்தைத்தான் உபயோகத்திற்கு இதயம் எடுத்துக் கொள்கின்றது. இதயம் இயங்க - அதாவது துடிப்பதற்கு 70 சதவிகிதமான பிராணவாயு தேவைப்படுகின்றது.

நூறு மில்லி லீட்டர் இரத்தத்தில் 20-45 மில்லி கிராம் புரதம்., 58-80 மில்லி கிராம் குளுக்கோஸ், 700-750 மில்லி கிராம் குளோரைட்டுகள் உள்ளன. ஆணின் இரத்தத்தில் ஒரு கனமில்லி லீட்டரில் 4.5-6.5 மில்லியன் சிவப்பு இரத்த அணுக்கள் உள்ளன.

அதேயளவு பெண்களின் இரத்தத்தில் 4.0 - 5.5 மில்லியன் சிவப்பு இரத்த அணுக் கள் உள்ளன.

நூறு மில்லி லீட்டர் ஆண்கள் இரத்தத்தில் 13.5 - 18.0 ஹீமோகுளோபின் உள்ளது. அதே அளவு பெண்கள் இரத்தத்தில் 11.5 - 16.5 ஹீமோகுளோபின் தான் உள்ளது.

நூறு மில்லி லீட்டர் இரத்தத்தில் 125 -300 மில்லி கிராம் கொலஸ்ட்ரோல் உள்ளது. நூறு மில்லி லீட்டர் இரத்தத்தில் 17-40 மில்லி கிராம் யூரியா, 1-4.5 மில்லி கிராம் யூரிக் அமிலம் உள்ளது.

## சாப்பிட்ட பின்பு

அரிசி, கோதுமை, பார்லி போன்ற வற்றினால் செய்யப்பட்ட உணவு களை உண்டபின்பு குளிர்ந்த நீர் பருக வேண்டும்.

தயிர் கலந்த உணவு சாப் பிட்டாலும் குளிர்ந்த நீர் பருக வேண்டும்.

இட்லி, தோசை, கொழுக்கட்டை, உப்புமா முதலிய உணவுவகை சாப்பிட்டால் வெந்நீர் பருகுதல் வேண்டும்.

பச்சைப் பயறு, தானிய வகைகள் சாப்பிட்ட பின்னர் மோர் பருக வேண்டும்.

பழங்கள் சாப்பிட்ட பின்னர் இரவில் சூடான பால் பருக வேண்டும்.

# தமிழரின் உணர்வுகளையும் வலிமையையும் உணர்த்தும் விழா

## கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர்

**இன்று திருகோணமலையில் எமது கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகும் இசை, நடன, நாடக விழா, ஈழத்தமிழ் கலைஞர்களின் இன்னொரு பாய்ச்சலாகும். எமது கலைகளின் வேர்களையும் விழுதுகளையும் அரங்கில் காணும் வாய்ப்பையும் சிங்களக் கலைஞர்களின் பாரம்பரியத்தையும் நவீனத்தையும் அதே அரங்கில் காணும் வாய்ப்பையும் இந்த விழா ஏற்படுத்திக்கொடுக்கும்.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தின துரை தெரிவித்துள்ளார். திரு கோணமலையில் நடைபெற்று வரும் இசை, நடன, நாடக விழா வின் ஆரம்ப நாளன்று ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலும் 400இல் இருந்து 480 கலைஞர்கள் பங்கேற்கும் இந்த விழா ஒரு திரிவேணிச் சங்கமமாகும். தமிழகத்திலிருந்து வரும் கலைஞர்கள் எமது சகோதரத்துவ கலைஞர்களினதும் இணைவும் எமது தாயக கலைஞர்களினது இணைவும் ஒன்றாகி இந்த விழா சமாதானத்திற்கான காலத்தில் உலகத்திற்குச் சொல்லாத சேதி ஒன்றைச் சொல்லும்.

எமது விடுதலை வேகத்தின் உலகளாவிய மானிட நேசிப்பையும் எல்லா இனங்களையும் அவர்களின் வாழ்வின் சகல வடிவங்களோடும் நாம் எடுத்தணைக்கும் பாங்கையும் நாம் நெருப்பாக வளர்க்கும் விடுதலையின் விசாலத்தையும் இந்த விழா எடுத்துக் காட்டும்.

இதுவரை எம்மீது திட்டமிட்டு உருமறைப்புச் செய்யப்பூசிய பயங்கரவாத வர்ணத்தை இல்லாது அழிக்கும்.

எமது தேசியத் தலைவரின் உண்மையான அமைதிக்கான தேடலின் சாட்சியாக இவ்விழா அமைகின்றது.

அவரது பணிப்பில்தான் இவ் விழா கால்கோள் கொண்டது. கலைகள் யாவும் மானிடத்தின் பாடல். மானிடம் உதையுறும் போதும் மகிழ்வுறும் போதும் நெஞ்சிலிருந்து அப்பாடல் எழுந்து பரவும்.

உலகெங்கிலுமுள்ள இனங்களை, மதங்களை, மொழிகளைக் கடந்தும், இந்த மானிடப் பாடல் தியாகம் கொண்டு புனிதத்திற்குரியதாக பெருமை பொருந்தும்.

இது ஈழத் தமிழர்களின் உணர்வுகளை வலியுறுத்துவதாகவும் வலிமையையுணர்த்துவதாகவும் இருக்கும்.

அதேவேளை, எல்லா இனங்களிடையிலான இணைப்பையும் இது சோபித்துக் கொள்ளும்.

எல்லாக் கலைகளும் இணைந்து எல்லோருக்கும் பொதுவான நேர்கோட்டில் பரிணமித்துச் செல்கின்றது. பார்க்க வரும் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர் என்றார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பதுமன் உரை நிகழ்த்துகையில்;

திருகோணமலையில் கலை பண்பாட்டுக்கழகம் முன்னெடுத்த இசை, நடன, நாடக விழா இடம், காலம், பொருள் பொதிந்த விழாவாகக் கருதுகின்றேன்.

எமது விடுதலை அமைப்பு இன்று எடுத்துவரும் சமாதானத்திற்கான முயற்சிகளில் இவ்விழா புதுமையானது. கலைகளுடனான நீண்ட எமது விடுதலைப் பயணத்தில் எமக்கு வரலாறு உண்டு. தமிழர் தம் தொன்மை வாய்ந்த பண்பாட்டுப் பேணலில் இசைக்கும் நடனத்துக்கும் நாடகத்துக்கும் முக்கிய பாத்திரமறிந்து முதன்மைப்படுத்தி உள்ளனர்.

அந்த வழித் தடத்தில் எமது தேசியத் தலைவரும் விடுதலைப் போராட்டத்தில் கலைஞர்களுக்குரிய இடத்தையும் மதிப்பையும் வழங்கி வருகின்றார்.

இன்றைய இந்த இசை, நடன, நாடக விழா இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் இவ்வேளையில், எமது இழந்து போன உரிமைகளை மீட்டெடுப்பதற்கான விடுதலைப் பயணத்தின் வழி நடத்தல் பாட்டாகவும் இது எமக்கு உற்சாகமளிக்கும் எனவும் நம்புகின்றேன்.

கலைகள் யாவுமே விடுதலைக் கானவை. இருண்டு கிடக்கும் மனங்களில் ஒளிபரவச் செய்பவை. எமக்கு வேண்டும் சுதந்திர மென உரத்துப் பாடச் செய்வது.

கலைகளும் கலைஞர்களும் சுதந்திரமானவர்கள், தீப்பிழம்பான வர்கள். போராளிகளும் அத்தகையவர்களே.

அந்நிக்கு எதிராக அணிவகுப் பவர்கள் எல்லோருமே கலைஞர்களே. எனவே கலைஞர்களும் போராளிகளும் ஒன்றானவர்கள்.

### சந்திப்பு

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலத்தில் எதிர்வரும் 21-04 காலை 9.30 இற்கு மாதர் சங்கத்தினருக்கான சந்திப்பு நடைபெறுமென முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அன்பரசி தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து மாதர்சங்கத்தினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (19)

## "விழி" இதழ் 31 வெளிவந்துள்ளது

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் மாதாந்த சுகாதார சஞ்சிகையான மருத்துவ இதழ் 31 நேற்று முன் தினம் கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையில் வைத்துக் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுஜந்தன் தலைமையில் வெளியிடப்பட்டது. காரமான உணவுகளை அதிகம் உண்பதால் வயிற்றில் அல்சர் ஏற்படலாம் என்னும் தலைப்புச் செய்தியுடன், பற்களைப் பாதுகாப்போம், கர்ப்பகாலக் கவனிப்பு, மனிதனுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் விலங்கு நோய்கள், சிறுவர் நலன் மற்றும் பல சுகாதாரச் செய்திகளைத் தாங்கி மருத்துவ "விழி" இதழ் 31 வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கோ)

### - மு/ஒதியமலை அ.த.க பாடசாலை -

## உடற்பயிற்சிப் போட்டியில் மாகாண மட்டத்திற்குத் தெரிவு

(புதுக்குடியிருப்பு)

மு/ஒதியமலை அ.த.க பாடசாலை உடற்பயிற்சிப் போட்டியில் மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு தெரிவாகியுள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் கோட்டமட்டத்தில் நடைபெற்ற உடற் பயிற்சிப்போட்டியில் பெண்கள் அணியில் வள்ளிபுனத்தில் இயங்கும் மு/ஒதியமலை அ.த.க பாடசாலை மாணவிகள் இரண்டாம் இடத்தினையும், வலய மட்டப்போட்டியில் முதலாம் இடத்தினையும் மாவட்டமட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று மாகாண மட்டத்தில் "மே"மாதம் நடைபெறவிருக்கும் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் தங்கியிருந்து கல்விகற்று வருவதென்பது குறிப்பிடத்தக்கது. (26)

## கௌதாரிமுனையில் சங்கக் கிளை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேசத்தில் இருந்து 1991ஆம் ஆண்டு வலம்புரி இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து பூநகரி தெற்குப் பிரதேசத்திலும் ஜெயபுரம் பிரதேசத்திலும் தற்காலிகமாக இயங்கி வந்த பூநகரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைச் செயலகம் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு மட்டுவில் நாடு, ஞானிமடம் போன்ற இடங்களில் ஏற்கனவே கிளைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது கௌதாரிமுனை மக்களின் நன்மைகருதி பூநகரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (பா)

## மீண்டும் பழைய இடத்தில்

முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம் முல்லைத்தீவில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. கடந்த திங்கட் கிழமை தொடக்கம் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (20)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீளக்குடியமர்விற்கான கொடுப்பனவு

(ஒட்டுசுட்டான்)

முதலாம் கட்ட மீளக் குடியமர்வு கொடுப்பனவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் வழங்கப் படுகின்றது.

இதேவேளை, இரண்டாம் கட்ட கொடுப்பனவிற்கான வேலைத் திட்டங்கள் துரிதகதியில் நடைபெறுகின்றது. எனவே மக்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர்களிடம் அல்லது கிராமப் புனர்வாழ்வு குழுக்களிடமோ பதிவுகளை மேற்கொண்டு ஒத்துழைக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செயலகம் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (05)

## கணினிப் பயிற்சிநெறி பூர்த்தி

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கனேடிய தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் நடாத்திய இலவசக் கணினிப் பயிற்சி நெறியில் பயின்று தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு த.பு.கழக கணினிப் பயிற்சி நெறியில் பயின்ற மாணவர்களையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய பிரிவில் கணினி பயின்று கொண்டிருக்கும் மாணவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் த.பு. கழகத்தினர் வேண்டிக் கொள்கின்றனர். (சோ)

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பியோர் 30ஆம் திகதிக்கு முன் பதிவு செய்க

(அலுவலக செய்தியாளர்)

இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சம் கோரியிருந்து மீண்டும் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மீளக் குடியமர்ந்தவர்கள் தங்களது பதிவுகளை கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டச் செயலகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (பா)

### -பாடசாலைக் கல்விசாராப் பணியாளருக்கான-

## கடமை நேரப் பட்டியல் அமைச்சால் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் கல்வி சாராப் பணியாளருக்கான கடமை நேரப் பட்டியல் தொடர்பான விபரங்களைப் பாடசாலைக் கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளில் கடமை புரிவதற்கென நியமிக்கப்பட்டுள்ள கல்வி சாராக் கனிஷ்ட ஊழியர்களால் செய்யப்பட்ட வேண்டிய பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமையினால் பாடசாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் அசுத்த நிலையில் இருப்பதாகவும்,ஏனைய கல்வி சாராப் பணியாளர்கள் தமது கடமைகளை முறையாக மேற்கொள்வதில்லை எனவும் பாடசாலை கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தவிர சில வேளைகளில் பாடசாலைச் சங்க சிற்றூழியர்கள் கடமைக்குப் புறம்பான பணிகளையும் மேற்கொள்ளுமாறு சில அதிபர்களினால்-சிற்றூழியர்கள் பணிக்கபடுவதாகவும் ஊழியர் தொழிற் சங்கங்கள் அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

இதையடுத்தே, கல்விசாராச் சிற்றூழியர்களின் கடமைகள் தனித்தனியாக வரையறுக்கப்பட்டு, பட்டியல்படுத்தி பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பாடசாலைக் கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளது.

பாடசாலை எழுதுவினைஞர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தட்டெழுத்தாளர்கள், புள்ளி விபரத்தகவல் பணியாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், ஆய்வு கூட ஊழியர்கள், பாடசாலைத் தொழிலாளர்கள், காவலாளிகள் ஆகியோருக்கான கடமைப்பட்டியல்களே வெளியிடப்பட்டுள்ளன.

## சமுகம்தரவும்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எதிர்வரும் 17-20.04 வரையான தினங்களில் உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் வைத்து சிறுபோக செய்கைக்கான ஈவு (பங்கு) வழங்கப்படவுள்ளதால் இப்பகுதி விவசாயிகள் தவறாது தமது பங்கைப் பெற்றுக் கொள்ளுமாறு விசுவமடுப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சு.சிறிதர் தெரிவித்துள்ளார்.

இத்தினங்களில் பங்கை தவறவிடுவோர் பின்னர் பெறமுடியாதென்பதையும் விவசாயிகள் கவனத்திற் கொள்ளுமாறு இணைப்பாளர் மேலும் தெரிவிக்கின்றார். (19)

## சிந்தனைக்கு

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆத்மாவில் வீழ்த்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-04-2003

## கோராத பாதுகாப்பு?

யாழ். நகரில் முகாம் அமைப்பது தொடர்பாக எழுந்த சர்ச்சையினைத் தீர்க்கும் பொருட்டு- புதிய இடம் ஒன்றைத் தெரிவு செய்யும் பொருட்டு- பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பில் எதுவித இணக்கப்பாடும் ஏற்பட்டதாக இல்லை.

தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்த கல்லுண்டாய் வெளிப்பகுதியில் முகாம் ஒன்றை அமைப்பதற்கு இராணுவத் தரப்பு உடன்பாடு கொள்ளவில்லை. "இப்பகுதி மக்கள் நடமாட்டமற்ற பகுதி. இவ்விடத்தில் எப்படிப் படையினர் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கமுடியும்?" எனச் சிறிலங்காவின் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல், சரத் பொன சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகா முதலில் சிங்கள அரசியல்வாதிகள் பேசுவதைப் போன்று பேசுவதை நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக இராணுவம் நிலை கொண்டுள்ளது எனக் கூறுவதையே ஆகும். இது இங்கு எவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் விளக்கமல்ல.

வடக்கு- கிழக்கில் இராணுவம் நிலை கொண்டிருப்பதானது, தமிழ்மக்களைப் பொறுத்து ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையே. சிறிலங்கா அரசின் அடக்குமுறையின் கருவியாகவே சிங்கள இராணுவம் தமிழ்மக்களால் பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாகவே இரா ணுவத்தை விலக்கிக்கொள்ளக் கோரி, தமிழ்மக்கள் பல போராட்டங்களை நடாத்தியுள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசு வடக்கு-கிழக்கில் இராணுவம் நிலைகொண்டிருப்பதை, ஆக்கிரமிப்பு அடக்கு முறை எனக் கூறுவதை ஏற்பதாக இல்லை. மாறாகப் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றின் அடிப்படையிலேயே இராணுவம் நிலைகொள்ளவைக்கப்பட்டுள்ளது எனக் கூறமுனைகிறது.

ஆனால், தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவமாகவே கொள்வதினால், அவர்கள் என்றுமே சிங்கள இராணுவம் தமக்கும் தமது பிரதேசத்திற்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கோரவில்லை. சிங்கள இராணுவம் கூட அவர்களுக்கு எப்பொழுதும் பாதுகாப்பு அளித்ததாகவும் இல்லை.

சிறிலங்கா இராணுவம் தமிழ்மக்களைப் பொறுத்து வரலாற்று ரீதியாகவே ஒரு இன அழிப்புக் கருவியாகவே இருந்துள்ளது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தபோதும் சரி, அங்கு நிலைகொண்டுள்ள போதும் சரி பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் படுகொலைக்கு அது காரணமாகியுள்ளது. பல்லாயிரக் கணக்கானோர் சித்திரவதைகளை அனுபவிக்கவும், தமிழ்ப் பெண்கள் பாலியல்வல்லுறவிற்கும், இம்சைகளுக்கும், உள்ளாவதற்கும் அது காரணமாக இருந்துள்ளது.

ஆகையினால், தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கென இராணுவம் நிலைகொண்டுள்ளது எனக்கூறுவது, தமிழ்மக்கள் மீது தொடர்ந்தும் அது ஆதிக்கம் செலுத்த முற்படுவதையே வெளிப்படுத்துவதாயுள்ளது. சிறிலங்கா அரசு உண்மையிலேயே இராணுவத்தை ஓர் ஆக்கிரமிப்பு இராணுவமாக நிலைகொள்ளவைக்காதுவிட்டால், சன நடமாட்டமற்ற பகுதியில் இராணுவம் நிலைகொள்வதில் என்ன தவறுள்ளது. வேறுவிதமாகக் கூறின்- அதாவது சிறிலங்கா அரசு கூறுவது போல், பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பதற்காகவே இராணுவம் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளதெனின் அது வெட்டையாக இருந்தால் என்ன? வெளியாக இருந்தால் என்ன? வடக்கு-கிழக்கில் இருந்தால் சரிதானே.

இதற்குமாறாக இராணுவம் மக்களின் மத்தியில் நிலை கொண்டிருப்பதோ அன்றி மக்களின் உடைமைகளில் நிலை கொண்டிருப்பதோ மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எப்பொழுதுமே இடையூறானதாகவே இருக்கும். இதன் காரணமாகவே இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்காக- இராணுவம் மக்களின் வாழ்விடங்களில் இருந்தும், பொது இடங்களில் இருந்தும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

இந்நிலையில், வெளிகொண்ட பகுதியில் இருக்கமாட்டோம். மக்கள் வாழும் பகுதியிலேயே இருப்போம் எனக் கூறுவதும் மக்கள் கோராத பாதுகாப்பை வழங்குவோம் எனப்பிடிவாதம் செய்வதும் அதன் ஆக்கிரமிப்பு நோக்கத்தையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. இது சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்திற்கு எப்பொழுதுமே உகந்தவையாக இருக்கமாட்டாது.

# பொதுச்சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி தொண்டராசிரியர் நிரந்தரமாக்கப்படுவர்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயிரம் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான கூட்டம் ஒன்றில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

தொண்டராசிரியர் பிரச்சினை குறித்து அலரிமாளிகையில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

பொதுச்சேவை ஆணைக்குழுவில் கலந்துரையாடி நிரந்தர நியமனத்தை வழங்குவது என இக் கூட்டத்தின்போது முடிவுசெய்யப்பட்டது. அத்துடன் இது தொடர்பான ஒப்புதல் ஒன்றைப் பெறுவதற்காக உரிய கோவைகளை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கு மாறு கல்வியமைச்சருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார். யாழ்.மாநகர சபை மைதானத்தில் படை முகாம் அமைப்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. பொது மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் படைமுகாம்கள் அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்தியதை செவிமடுத்த ரணில் விக்கிரமசிங்க சகல தரப்பினருடனும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமென் உறுதி வழங்கியுள்ளார்.

## அஸ்லி வில்ஸ்- அநுரா சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ் இலங்கை சனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சந்திப்பு ஒன்றரை மணி நேரம் இடம்பெற்றது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் சனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கவிருந்ததாகவும் அவரைச் சந்திக்க முடியாமையினாலேயே அனுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# போலிஸ், நீதிமன்ற நடவடிக்கைகளை முடிந்தளவில் தமிழில் நடத்துக!

## வடபகுதி நீதிபதிகள் பொலிசாருக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

வடக்கில் பொலிஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை முடிந்தளவில் தமிழ் மொழியில் மேற்கொள்ளுமாறு வடபகுதி நீதிமன்ற நீதிபதிகள் வடபகுதி பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது வடபகுதி நீதிமன்றங்களில் பொலிஸ் அதிகாரிகள் தமது அறிக்கைகளை சிங்கள மொழியிலேயே சமர்ப்பிக்கின்றனர்

இதனால் வடபகுதி நீதிமன்ற நடவடிக்கைகளை கொண்டு செல்வதில் சிரமங்கள் ஏற்படுவதாக யாழ். நீதவான் விக்னராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களுக்கான நீதவான் நீதிமன்றங்கள் யாழ். மாவட்ட 17 பொலிஸ் நிலையங்களின் அதிகாரப்பகிர்வுக்கு உட்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இதனால் பொலிசார் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட அறிக்கைகளை தமிழ்மொழியில் தயாரிக்குமாறும் மேற்படி நீதவான்கள் பொலிசாருக்கு அறிவித்துள்ளனர்.

## அடிப்படை வசதிகளின்றி புளியங்குளம் மக்கள்

(அலுவலக செய்தியாளர்)

அடிப்படைவசதிகள் ஏதுமின்றி வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியவண்ணமுள்ளனர்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைமூலம் இப்பிரதேசத்தை விட்டு இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இங்குள்ள புளியங்குளம் இந்துக் கல்லூரி குடிநீர் மற்றும் நிரந்தரக் கட்டடங்கள் இல்லாது தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருவதோடு அதிபர் அலுவலகம் கூட இல்லாது பாடசாலையின் ஆவணங்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளது. அத்தோடு வைத்தியசாலை இல்லாத நிலையில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினர் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தற்போதைய சூழலில் நாட்டிற்கு தேர்தல் நடத்துவது உகந்ததல்ல

## எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் தேர்தல் ஒன்றை நடத்துவது உகந்ததல்ல என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துக் கூறும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிப்பீடமேறினால் அமைச்சர் பீரிஸ் கைது செய்யப்படுவார் என கூறப்பட்டுள்ளது பற்றிக் கேட்ட போது, இவ்விவகாரம் கட்சிக் கூட்டத்தில் ஆராயப்படவில்லை என்று மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

# அபிவிருத்தியைத் திட்டமிட ஏழுகோடி ரூபா நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் அபிவிருத்தி பணிகளைத் திட்டமிடுவதற்கென்று, ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித் திட்டம் ஏழு கோடி ரூபாவை உதவியாக வழங்கவுள்ளது.

யுத்தத்தினால் அழிந்துபோன வடக்கு-கிழக்குப் பகுதிகளை சீர் செய்யவும் ஏனைய பகுதிகளை புனரமைப்புச் செய்யவும் இந்நிதி வழங்கப்படுகின்றது. பிரிட்டன்,கனடா,சுவீடன், யு.என்.டி.பி என்பன இந்த உதவித் தொகையை வழங்கவுள்ளன.

இந்த உதவிக்கான உடன்படிக்கையில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், யு.என்.டி.பி.யின் வதிவிடப் பிரதிநிதி மிக்கேல் சர்மியு, வெளிநாட்டு வளத்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சுயாத்தாகுரே ஆகியோர் நேற்று கைச்சாத்திட்டுள்ளனர்.

## கைதிகள் இடமாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை மகஸின் சிறைச்சாலைகளில் உள்ள தொளாயிரம் சிறைக்கைதிகள் களுத்துறை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிக்கு தீர்வுகாண்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என சிறைச்சாலைகளின் பதில் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# முல்லை மாவட்டத்திற்கான சிரான் உபகுழுக் கூட்டம்

## திட்ட முன்மொழிவுகள் பல முன்வைப்பு

நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட சிரான் குழுக் கூட்டம் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் கூடியது.

இக்கூட்டத்தில் மேலும் உதவி அரசாங்க அதிபர்களும், திணைக் களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாவட்டத்தின் மிக அவசியமான வேலைத்திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

மேலும் பல திட்ட முன்மொழிவுகளும் திணைக்களத் தலைவர்களாலும், பெண்கள் புனர்வாழ்வுக் கழகத்தினாலும் முன்வைக்கப்பட்டன.

இவ் ஒன்றுகூடலில் இறுதியில் வீதி, கல்வி, உயர் சார்பு தொழிற்சாலைத் திட்டங்கள், விவசாயம் சார்ந்த திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி முல்லைத்தீவு மாவட்ட சிரான் திட்ட இணைப்பாளர் சசிதரன் அவர்களிடம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும் கையளித்தனர். மேலும் அடுத்த சிரான் மாவட்ட குழுக் கூட்டம் மே மாதம் 6ஆம் திகதி காலை 10.00 மணிக்குக் கூடுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

## விழாக்கால முற்பணமாக 2000ரூபாவே அனுப்பிவைப்பு

புதுக்குடியிருப்பு ஆசிரியர்களுக்கான விழா முற்பணமாக 3000 ரூபா வழங்கும் படி அரசாங்கம் சிபார்சு செய்திருந்தும் முல்லை வலயத்திற்குக் குறைந்தளவு நிதியே அனுப்பிவைக் கப்பட்டுள்ளது.

இவ்வலயத்திற்கு மாகாண கல்வி அமைச்சினால் 2000 ரூபாவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து மேலதிக அறிவித்தல் ஏதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றும் சம்பந்தப்பட்டோர் தெரிவிக்கின்றனர். இதனால் ஆசிரியர்கள் கவலையடைந்துள்ளனர். (26)

## கொழும்பு திரும்பினார்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி நேற்று அதிகாலை கொழும்பு திரும்பியுள்ளார்.

இந்தியாவுக்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்த இவர் இந்தியப் பிரதமர், சனாதிபதி, துணைப்பிரதமர், வெளிவிவகார அமைச்சர், முன்னாள் பிரதமர் குஜ்ரால் ஆகியோர் மற்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடனும் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

## வவுனியாவில் கடந்த மாதம் 6 பேர் காணாமல் போயினர்!

(வவுனியா)

வவுனியாவைச் சேர்ந்த ஆறுபேர் கடந்த மாதம் காணாமல் போயுள்ளதாக வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாலேந்திரன் பாக்கியநாதன் (வயது - 20), சுந்தரரஞ்சன் கவி (வயது - 35), சண்முகநாதன் சிவநேசன் (வயது - 34), மீராசகின் கேசான் (வயது - 35), நூர்டீன் (வயது - 45), செல்டன் (வயது - 27) ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.

### -கிளிநொச்சி மாவட்டத்தில்-

# சத்துணவுபெறும் பெண்களுக்கு சுகாதாரம் குறித்த கல்வி

உலக உணவுத்திட்டம், யுனிசெவ் நிறுவனமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியோர்களுக்கு சோளம், சோயா கலந்த சத்துணவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்த உதவியைப் பெறும் பெண்களுக்கு போசாக்கு, சுகாதாரம் சம்பந்தமான கல்வியை வழங்கும் நோக்குடன் ஆரம்பகட்டமாக பத்துத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏதுவாக ஒருஇலட்சம் ரூபாவை கிளி அரச அதிபருக்கு உலக உணவுத் திட்டத்தினர் வழங்கியுள்ளனர்.

இக்கல்வித்திட்டம் முதலாம் கட்டமாக பூநகரி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஜெயபுரம், ஆலங்கேணி கிராமங்களிலும் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாரதிபுரம், சாந்தபுரம், பன்னங்கண்டி, அக்கராயன் ஆகிய கிராமங்களில் கடந்த கிழமை செயற்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புலோப்பளை, முகாவில் ஆகிய கிராமங்களிலும், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் முரசுமோட்டை, பரந்தன் ஆகிய கிராமங்களிலும் இம்மாத இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சோளம், சோயா கலந்த சத்துணவைப் பெறத்தகுதியுடைய தாய்மார்கள் சகலருக்கும் போசாக்குக் கல்வியை வழங்க உலக உணவுத்திட்டம் மேலும் நிதியுதவியை வழங்குவதற்கு இணங்கியுள்ளது. எனவே மேலும் பல திட்டங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்போசாக்குக் கல்வித்திட்டம் அரச அதிபரின் வழிகாட்டலின் கீழ் உதவி அரசாங்க அதிபர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும், மாவட்ட திட்டமிடல் செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சி.குணராசிங்கம் உலக உணவுத் திட்ட ஆலோசகர் தி. துரைசிங்கம் அவர்களின் நேரக் கண்காணிப்பிலும் செயற்படுத்தப்படுகின்றது. (சோ)

### சிறுவர்களின்...

பான விடயங்களை ஆய்வுசெய்தனர்.

இத்திட்ட நடவடிக்கையானது அமுல்படுத்தும் முறைகளுக்கான ஓர் ஒருங்கிணைந்த அலகு முறையைக் கையாளத்தலையும் சிறுவர் நலன்களுக்கு வழிகாட்டும் வழி முறையையும் அடிப்படையாகக் கொண்டது.

இதேவேளை இந்தச் செயற்பாட்டுக்குழு வடக்கு-கிழக்கில் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவுக்கு காலாண்டு வாரியான முன்னேற்ற அறிக்கையைக் கையளிக்கும். இத்திட்ட நடவடிக்கையானது அடுத்த சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பிப்பதற்காக ஏப்ரல் 29ஆம் திகதிக்கு முன் முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இறுதிநாள் நிகழ்வில் சிறிலங்கா சமாதானச் செயலக பிரதிப்பணிப்பாளர் ஜோன் குணரட்ண, மற்றும் மனித வள அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதிகள், சமூக சேவை அமைப்பு பிரதிநிதிகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சுகாதார, கல்விச்சேவையைச் சேர்ந்த பிரதிநிதிகள், அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று பிப.1.30 மணிக்கு செயலமர்வு நிறைவு பெற்றது. (சோ)

### சிறந்த

பெண்கள் கல்லூரி மாணவி சி.உமைசொரூபி 9ஏ,சி பெற்று மாவட்டத்தில் சிறந்த பெறு பேற்றைப் பெற்றுள்ளார். (சோ)

### வடக்கு-கிழக்கு...

த்த உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இதன் பிரகாரம் முல்லைத்தீவு- மாங்குளம்- வெள்ளாங்குளம் வீதி புனரமைப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளின் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளன.

### அரசின்...

திருந்தது.

இதனைப் பரிசீலித்த அரசாங்கம் இந்த விடயம் தொடர்பாக தனது சிபார்சுகளை உள்ளடக்கியே இந்தத் திட்டத்தினைத் தயாரித்திருக்கின்றது.

### -கிளிநொச்சி வைத்தியசாலைக்கென-

## அவசர சேவைப் பிரிவொன்றை விரைவில் உருவாக்க ஜப்பான் உதவி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வைத்தியசாலைக்கென உடனடி அவசர சேவைப் பிரிவையும் சில அடிப்படை வசதிகளையும் விரைவில் உருவாக்குவதற்கான பணியினை ஜப்பான் அரசு பொறுப்பேற்றுள்ளது.

நேற்று வன்னிக்கு விஜயம் மேற்கொண்ட மூன்று பேர் கொண்ட ஜப்பானிய பிரதிநிதிகள் இந்த உறுதிமொழியை சிரான் அமைப்பிடம் தெரிவித்துள்ளனர்.

இதற்குக் கிளிநொச்சி பழைய வைத்தியசாலையின் சேதமடைந்த இடத்தைத் தெரிவுசெய்ததுடன் இப்பணியினை மே மாதம் ஆரம்பித்து ஆகஸ்ட் மாதத்தில் நிறைவு செய்வதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது.

## வட்டக்கச்சிப் பகுதிக் கொலை; சந்தேகநபர் நேற்றுக் கைது!

வட்டக்கச்சிப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கொலைச்சம்பவம் தொடர்பாக நேற்றுப் பகல் சந்தேக நபர் ஒருவர் கைதானார்.

வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் மூன்று பிள்ளைகளின் தந்தையாராகிய நாகராசா இராசேந்திரன் என்பவர் அதிகாலை நித்திரையில் இருந்தவேளை வெட்டிக் கொல்லப்பட்டமை தெரிந்ததே. இவரது கொலை தொடர்பாக நேற்றுப்பகல் 10.30 மணியளவில் விசுவமடுப் பகுதியில் வைத்துச் சந்தேக நபர் ஒருவர் கைதானார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், வட்டக்கச்சி காவல் பணிமனையினரின் தீவிர முயற்சியால் கைதுசெய்யப்பட்டு காவல்துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (12)

### அரசின் நடவடி...

துள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் வாஷிங்டனில் ஆர்மிரெச்சைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, ஈராக்கில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற போதும் இலங்கையின் சமாதான முயற்சியில் உலக சமூகம் அக்கறை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சர்வதேச...

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கையின் போது இந்த அறிக்கை பெரிதும் பயன்படும் என்றும் அரச ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு மீள்குடியமர்வு, சுகாதாரம், கல்வி, வீடமைப்பு, பொதுவசதிகள், விவசாயத்துறை உட்பட பல்வேறு விடயங்களின் இந்தச் செயற்திட்டங்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளின்...

டுகள் மற்றும் அடிப்படை நடைமுறைகள் போன்ற விடயம் தொடர்பாக அவர் கருத்தரங்கை மேற்கொண்டார்.

அத்துடன், டென்மார்க்கில் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக வெளிநாட்டு அமைச்சின் அதிகாரியொருவர் இக்குழுவினருக்கு எடுத்து விளக்கினார்.

டென்மார்க்கின் உள்ளூராட்சி அமைப்பு தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் இந்த அரசியல் குழுவினர் ஆராய்ந் துள்ளனர்.

நேற்று அவர்கள் டென்மார்க்கின் ஆட்சி முறையின் கீழ் இருக்கும் கிறீன்லாந்தீவின் அதிகாரிகளுடன் மனித உரிமைகள் விடயம் தொடர்பாக கலந்துரையாடினர்.

நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்த இக்குழுவினர் அங்குள்ள அரசியலமைப்பு மற்றும் ஆட்சி முறைகள் தொடர்பாக கலந்துரையாடியிருக்கின்றனர்.

## சாவு அறிவித்தல்

### முருகேசம்பிள்ளை வள்ளியம்மை

காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை வள்ளியம்மை 11.04.2003 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற முருகேசம்பிள்ளை (சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கரத்தினம், விசுவநாதன் (காரைநகர் ப.நோ.கூ. சங்கம்), காலஞ்சென்ற சண்முகநாதன், திருநாவுக்கரசு (காரைநகர் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), மேனகை, காந்திமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், குணமலர் (கொழும்பு), நாகேஸ்வரன் (பிரான்ஸ்), செல்வராணி (லண்டன்), தேவராணி (டென்மார்க்), தம்பிராசன் (கனடா), கிருஸ்ணவேணி (யாழ். பல்கலைக்கழகம்), குகனேசன் (காரை. யாழ்ரன் கல்லூரி), பாலேந்திரன் (காரை. யாழ்ரன் கல்லூரி), சிவானி (ஆசிரியர், சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை 2.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.திருநாவுக்கரசு (மகன்)
(காரைநகர்).
07ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.
(சி-2833)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.